**சுருக்கம்**

மறுவாழ்வு – அயலகத் தமிழர் நலன் – தமிழ்நாடு அரசின் 06.10.2021 அன்றைய செய்தி வெளியீடு – "கோவிட் 19 பெருந்தொற்று காரணமாக வேலையிழந்து தமிழ்நாடு திரும்பியவர்களுக்கு குறு தொழில்கள் செய்திட, அதிகபட்சமாக இரண்டரை இலட்சம் ரூபாய் மானியத்துடன் கூடிய கடன் வசதி செய்துத் தரப்படும் மற்றும் இதற்கென ஆறு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்" என்ற திட்டத்தினை செயல்படுத்திட ரூ.5,97,35,000/– நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**பொது(மறுவாழ்வு.2(2))த் துறை**

**அரசாணை(நிலை)எண்.529** **நாள்.31.08.2023.**

சோபகிருது வருடம், ஆவணி–14
திருவள்ளுவர் ஆண்டு–2054

படிக்கப்பட்டது:

1. தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு எண்.842, நாள் 06.10.2021.
2. அரசாணை (நிலை) எண்.569, பொது (மவா.2)த் துறை, நாள் 23.08.2022.
3. அயலகத் தமிழர் நலன் (ம) மறுவாழ்வுத் துறை ஆணையரின் கடிதம் ந.க.எண்.இ1/13614/2021, நாள் 23.06.2023.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க அறிவித்த பல்வேறு நலத்திட்டங்களுள் கீழ்க்காணும் அறிவிப்பும் அடங்கும்:–

> "கோவிட் 19 பெருந்தொற்றுக் காரணமாகச் சுமார் ஏழு இலட்சம் தமிழர்கள் தாயகம் திரும்பியுள்ளனர். இவர்களில் பலர் வேலையிழந்தும் திரும்பியுள்ளனர். இவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தில், தமிழ்நாடு திரும்பியவர்களுக்கு குறு தொழில்கள் செய்திட, அதிகபட்சமாக இரண்டரை இலட்சம் ரூபாய் மானியத்துடன் கூடிய கடன் வசதி செய்து தரப்படும். இதற்கென ஆறு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்".

2. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கு செயல்வடிவம் கொடுக்கும் முகமாக, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கோவிட் பெருந்தொற்றுக் காரணமாகச் தாயகம் திரும்பியவர்களுக்கென தமிழர் நலன்

த.பி.பா..

மற்றும் மறுவாழ்விற்காக வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (Migrants Employment Generation Programme (MEGP)) என்பதை உருவாக்கி அதனை செயல்படுத்திட ரூ.5,97,35,000/- நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரின் கடிதத்தில், நிருவாக காரணங்களினால் மேற்படி திட்டத்தினை செயல்படுத்த தாமதமானதால் கடந்த நிதியாண்டு (மார்ச் 2023) முடிவில் மேற்படி நிதி ரூ.5,97,35,000/- அரசிடம் சரண் செய்யப்பட்டுள்ளது என்றும் தற்போது இத்திட்டத்தினைச் செயல்படுத்த அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகத்தினால் முடிவெடுக்கப்பட்டுள்ள நிலையில் அரசுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட தொகையான ரூ.5,97,35,000/-ஐ மீண்டும் வழங்கி, இத்திட்டத்தினை செயல்படுத்த உரிய அனுமதியினை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்களின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்தபின், அதனை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 06.10.2021-ஆம் நாளிட்ட செய்தி வெளியீட்டு அறிவிப்பான "அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்விற்காக வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (Migrants Employment Generation Programme (MEGP))" என்ற திட்டத்தினை செயல்படுத்திட ஏதுவாக ரூ.5,97,35,000/-ஐ (ரூபாய் ஐந்து கோடியே தொண்ணூற்று ஏழு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:-

2235-சமூக பாதுகாப்பும் நலனும் - 01 மறுவாழ்வு-140 ஏனைய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு மாநில செலவினங்கள் - BB கோவிட்-19 தொற்று நோய் பரவல் காரணமாக தமிழகம் திரும்பிய தமிழர்களுக்காக புலம் பெயர்ந்தோர் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தை செயற்படுத்துதல் -

| | |
|---|---|
| 305 அலுவலகச் செலவுகள் - 02 ஏனைய சில்லறைச் செலவுகள் (த.தொ.கு.2235-01-140-BB -30502) | ரூ.1,70,000/- |
| 311 மானியங்கள் - 02 பொதுவான மானியம் (த.தொ.கு.2235-01-140-BB -31102) | ரூ.5,79,40,000/- |
| 333 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் - 04 ஒப்பந்த ஊதியம் (த.தொ.கு.2235-01-140-BB -33304) | ரூ.4,80,000/- |
| 372 பயிற்சி - 01 பயிற்சி (த.தொ.கு. 2235-01-140-BB -37201) | ரூ.7,95,000/- |
| 376 கணினியும் துணைப் பாகங்களும் - 01 வாங்குதல் (த.தொ.கு. 2235-01-140-BB-37601) | ரூ.3,50,000/- |

6. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.5,97,35,000/-ஐ 2023-2024-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2023-2024-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2023-2024-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (பொது / வ.செ.பொ-1)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதி (பொது)த் துறையின் அ.சா.எண்.13146, நிதி (வ.செ.பொ-II/நிதி (பொது)/2023, நாள் 31.08.2023, ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. (இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.777 (எழுநூற்று எழுபத்தேழு). (IFHRMS ASL No.2023080777).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. நந்தகுமார்**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
ஆணையர்,
அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை-5.
அரசு முதன்மைச் செயலாளர்,
நிதித்துறை, சென்னை – 600 009.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-8.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
செயலாளர்,
மத்திய உள்துறை அமைச்சகம்,
(FFR Division, Rehabilitation Wing,),
புதுடெல்லி.

**நகல்:**
மாநில கணக்காயர், சென்னை-18.
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அலுவலகம்,
சென்னை-9.

சிறப்பு நேர்முகக் உதவியாளர்,
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் அலுவலகம்
நிதி(பொது/வ.செ.பொ.I/II/வ.வ.I)த் துறை, சென்னை-9.
பொது(ம.வா.I/III)த் துறை, சென்னை-9.
பொது(அ.ந.மு.1/பல்வகை)த் துறை, சென்னை-9.
மனையக தணிக்கை அலுவலர், சென்னை -9.
ஊதியம் மற்றும் கணக்கு அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை - 9
இ.கோ/உதிரி.

**//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//**

31/8/2023

**பிரிவு அலுவலர்**

31/8/2023